# மலேசியாவில் முதல் மேட்ரிக்ஸ் மேதாவெர்ஸ் சொத்துடைமை தளம்

(துர்க்கா)



சிரம்பான், அக். 4-

மலேசியாவில் முதல் மேதாவெர்ஸ் சொத்துடைமை தளத்தை அறிமுகம் செய்து மேட்ரிக்ஸ் கோன்சப் நிறுவனத்தினர் சாதனைபடைத்துள்ளனர்.

நாட்டில் முன்னணி சொத்துடைமை நிறுவனமாக மேட்ரிக்ஸ் விளங்கி வருகிறது. சொத்துடமை துறையில் பல சாதனைகளை இந்நிறுவனம் சாதித்து வருகிறது.

இச்சாதனைகளின் உச்சகட்டமாக மேதாவெர்ஸ் சொத்துடைமை தளத்தை இந்நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

மேட்ரிக்ஸ் மேதாவெர்ஸ் என்பது ஒரு மெய்நிகர் ரியாலிட்டி பிரபஞ்சமாகும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் இணையம் வாயிலாக நிகழ் நேரத்தில் ஒவ்வொருக்கொருவர் தொடர்பு கொள்ள முடியும்.

இதில் பங்கேற்பவர்கள் தங்களின் சொந்த அவதாரங்களை உருவாக்கலாம். அவர்கள் மைக்ரோ ஃபோன், வீடியோ கேமராவை பயன்படுத்தி மெதாவேர்ஸ் வாயிலாக எந்த நேரத்திலும் மற்றவர்களுடன் உரையாடலாம்.



மேலும் மேட்ரிக்ஸ் நிறுவனத்தின் வீடமைப்பு திட்டங்களை 360 டிகிரி சுற்றுப்பயணத்தையும் மேற்கொள்ளலாம். இது வாடிக்கையாளர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்கும் என்று அந்நிறுவனத்தின் விற்பனைப் பிரிவு தலைமை அதிகாரி லிம் கோக் யீ கூறினார்.

மேட்ரிக்ஸ் அதன் குறுகிய மற்றும் நடுத்தர கால இலக்குகளை எதிர்கால தயாரிப்பு வெளியீடுகள் மற்றும் விளம்பரங்களுடன் சந்திக்க உத்திகளை வகுத்து வருவதால், மேட்ரிக்ஸ் குழுமம் உலகளவில் அதன் சந்தையை விரிவுபடுத்தும் வகையில் அதன் வளர்ச்சியை எதிர்பார்த்து, அத்தகைய தளத்தை வழங்குவதற்கு மேட்ரிக்ஸ் கான்செப்ட்ஸ் முதலீடு அவசியம் என்று லிம் வலியுறுத்தினார்.

மேட்ரிக்ஸ் வேதாவெர்ஸ் பரந்த ஆற்றல் அதன் டிஜிட்டல் பிரபஞ்சத்திலேயே உள்ளது என்று அவர் விளக்கினார். ஏனெனில் இந்த தளம் உண்மையான யதார்த்தத்திற்கு இணையான மாற்று இருப்பை உருவகப்படுத்துகிறது என்று அவர் கூறினார்.

இதுகுறித்த மேல்விவரங்களுக்கு www.matrixmetaverse.co எனும் அகப்பக்கத்தை வலம் வரலாம்.